DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 72/2021**

**Deposition of LW3 examined as PW3** (Eye witness) Dt. 03.07.2025

| | |
|---|---|
| Name | சிவகாமி |
| Father's/Husband's Name | உத்திராபதி |
| Village | சருக்கை, குத்தாலம் தாலுக்கா |
| Taluk | |
| Age | 70/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.07.2025

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா1, அ.சா.2 யை எனக்கு தெரியும். அ.சா1, அ.சா.2 பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜரில் உள்ள எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளுக்கும் அசா1க்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்த நிலையில் கடந்த 25.11.2019 காலை சுமார் 6 மணிக்கு வயலுக்கு சென்று கொண்டிருந்த போது மணிசேகரனும் அவரது மனைவியும் சேர்ந்து மகேந்திரனை பார்த்து குச்சிக்காரி மகனே தேவிடியா மகனே என்று தகாத வார்த்தைகளில் திட்டியதாகவும், மணிசேகரன் கையில் வைத்திருந்த கட்டையால் மகேந்திரனின் உடலிலும் முதுகிலும் அடித்ததாகவும் அதில் மகேந்திரனுக்கு நெற்றியின் இடது பக்கத்தில் ரத்த காயம் ஏற்பட்டதாகவும் தடுக்க வந்த அ.சா2 சுகன்யாவையும் மணிசேகரன் அடித்ததாகவும் நான்ஓடிவருவதை பார்த்த மணிசேகரன் மகேந்திரனை பார்த்து கையில் வைத்திருந்த கட்டையை காட்டி என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றதாகவும் பின்னர் மகேந்திரன், சுகன்யா இருவரும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும் மகேந்திரன்

LTI of Sivakami

(signature) 3.7.25

உள்நோயாளியாக இருப்பதாக கேள்விபட்டதாகவும் போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

LTI of Sivakami

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

3.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை